16th December 1959]

The Hon. Sri C. SUBRAMANIAM : இங்கே கையிலிருக்கிற விவரங்களிலிருந்து குடிதண்ணீர் வசதி இல்லாததால் போக முடியவில்லை என்று தெரிகிறது. இதிலே எலெக்ட்ரிஸிடியைப்பற்றி ஒன்றும் காணோம். அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். எந்தக் குறை இருந்தாலும் அதை நீக்க முயற்சி செய்கிறோம்.

Secondary School Examinations.

* 219 *Q.*—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the attention of the Government has been drawn by the Union Government regarding the high rate of failures in the Secondary School Examinations?

The Hon. Sri C. SUBRAMANIAM : Yes, Sir.

The All-India Council for Secondary Education, New Delhi, examined the causes for the high percentage of failures in the S.S.L.C./Matriculation Examinations in the country in 1958 and recommended certain remedial measures. No other reference has been received from the Government of India in the matter. The question is engaging the attention of Government.

Sri A. A. RASHEED : What are the reasons for such high percentage of failures?

The Hon. Sri C. SUBRAMANIAM : Ultimately it depends upon the students themselves—how best they apply themselves to their studies. If there are causes which disturb the academic atmosphere in the schools, they mostly contribute to these failures.

Sri A. A. RASHEED : What are the steps taken by the Government to reduce the percentage of failures?

The Hon. Sri C. SUBRAMANIAM : My answer was that the matter was under consideration.

Sri N. R. THIAGARAJAN : ஸார், இந்த ஆண்டு எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சையில் சோஷல் ஸ்டடீஸ் பாடத்தில் தான் மாணவர்கள் அதிகமாகத் தவறிவிட்டார்கள் என்று கேள்விப்படுகிறேன். அதில் மாத்திரம் அதிகமாகத் தவறியிருக்கக் காரணம் என்ன? அந்தப் பாடம் கடுமையாக இருக்கிறதா? அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்து பார்த்ததா?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதிலே ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு பாடத்தில் தவறுகிறார்கள். இந்த ஆண்டு சோஷல் ஸ்டடீஸ் பாடத்தில் அதிகமாகத் தவறியிருக்கிறார்கள். இதிலே ஒன்றும் கடினம் என்று சொல்ல முடியாது. 10-வது, 11-வது படித்து பள்ளிகளிலிருந்து வெளி வரும்போது மாணவர்களுக்கு ஓரளவுக்குப் பொது அறிவு இருக்க வேண்டும் என்று அதை அடிப்படையாகக் கொண்டு தான் இந்தப் பாடத் திட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது.

SRI M. C. MUTHUKUMARASWAMY : இப்படி அதிகமான மாணவர்கள் பரீட்சையில் தவறுவதற்குக் காரணம் தலைமை ஆசிரியர்களுக்கு இருந்த அதிகாரங்கள் குறைக்கப்பட்டதால் தலைமை ஆசிரியர்கள் மாணவர்களைக் கண்டிக்க முடியாமல் போனது தான் என்று சொல்லப்படுகிறதே, இனியாவது தலைமை ஆசிரியர்களுக்கு இந்த உரிமை வழங்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதிலே பல காரணங்கள் இருக்கின்றன. ஒரு காரணத்தை மட்டும் சுட்டிக்காட்டிச் சொல்ல முடியாது. இதையெல்லாம் பரிசீலனை செய்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

SRI S. M. ANNAMALAI : ஸார், மாணவர்கள் அதிகமாகத் தவறக் கூடிய பாடம் எது என்று அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா ? அதற்கு இந்த சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சர்க்கார் படித்து பரீட்சை எழுத முடியும் என்றால் நடவடிக்கை எடுக்கலாம். மாணவர்கள் படிக்க வேண்டியது, பரீட்சை எழுத வேண்டியது. ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு பாடத்தில் தவறுகிறார்கள். ஒரு சமயத்தில் ஆங்கிலத்தில் அதிகமாகத் தவறுகிறார்கள். இந்த வருஷம் சோஷல் ஸ்டடீஸில் தவறியிருக்கிறார்கள். அந்தந்த வருஷம் மாணவர்கள் பரீட்சை எழுதுவதைப் பொருத்து இருக்கிறது.

SRI A. VEDARATHNAM : ஆண்டுதோறும் ஆங்கிலத்திலே தவறக் கூடிய மாணவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அந்த நிலையிலிருந்து அவர்களைக் காப்பாற்ற அல்லது அந்த நிலைமையை உயர்த்த அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கின்றது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது ஓரளவு உண்மை தான். ஆங்கிலத்தில் அதிகமான பேர்கள் தவறி விடுகிறார்கள். அதற்காக ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கும் முறையை மாற்றி அமைக்க முயற்சியெடுத்துக் கொண்டிருக்கிறோம்.

SRI A. A. RASHEED : Has the Secondary Education Committee offered any solution to prevent such failures and if so may I know what it is?

THE HON. SRI C. SUBRAMANIAM : Many solutions are offered but when you examine them you find that they do not fit into the picture of a particular State. Therefore, it is a matter for this State to consider and find out what steps will have to be taken in our State to improve the quality of education.

SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM : இந்தத் தேர்விலே தவறியவர்களில் மாணவர்கள் அதிகமாகத் தவறியிருக்கிறார்களா ? அல்லது மாணவிகள் அதிகமாகத் தவறியிருக்கிறார்களா ?

16th December 1959]

THE HON. SRI C. SUBRAMANIAM : எனக்குத் தெரிந்த வரையில் இப்போது மாணவர்களை விட மாணவிகள் நல்ல முறையில் தேர்ச்சி பெறுகிறார்கள். மாணவர்களைப் போல் பல்வேறு விஷயங்களை மனதில் வைத்துக்கொண்டு அவற்றில் கவனத்தைச் செலுத்தாமல் அதிகமாக ஊக்கத்தோடு படிக்கிறார்கள். மாணவர்கள் வேறு விஷயங்களில் மனதை அதிகமாகச் செலுத்தி வருகிற காரணத்தினால் அவர்களுடைய படிப்பில் தரம் குறைந்து வருகிறது.

SRI K. B. S. MANI : கடந்த 10 ஆண்டுகளிலிருந்து இது வரை பார்த்தால் மாணவர்களுடைய ஒழுக்கக்கேடு பள்ளிக்கூடங்களில் அதிகமாக இருக்கிறது என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதிகமான ஒழுக்கக் கேடு இருக்கிறதென்று மாணவர்கள் பேரில் அபாண்டமாகச் சொல்லுவது சரியல்ல. நம்முடைய சமுதாயத்தில் இருக்கும் சூழ்நிலையைச் சரிப்படுத்த வேண்டும். அப்போதுதான் மாணவர்களின் நிலை சரியாகும்.

SRI A. GOVINDASAMY : "கோ-எஜுகேஷன்" இருக்கும் பள்ளிகளில் படிக்கின்றவர்களில் ஆண்கள் அதிகம் பேர் தேறுகிறார்களா ? பெண்கள் அதிகம் பேர் தேறுகிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் அவர்களுக்கு இதைத் தெரிந்து கொள்ளவேண்டுமென்ற ஆர்வம் அதிகமாக இருக்குமானால் தனியாகக் கேள்வி போட்டால் பரிசீலனை செய்து பார்த்துப் பதில் சொல்ல முடியும்.

Fishery and Korai grass

*220 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

கிராமங்களில் உள்ள ஏரிகளில் மீன், கோரைப்புல் மூலமாகக் கிடைக்கும் வருமானத்தில் கிராமத்திலுள்ள எல்லோருக்கும் பங்குண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : A paper[a] is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், மேஜை பேரில் வைத்திருக்கக்கூடிய பேப்பரில், ஒரு குறிப்பிட்ட சில இடங்களில் 3 வருஷத்துக்கு ஒரு முறை ஏலம் போடுவதாகவும், சில இடங்களில் அவர்கள் சொந்தமாக அனுபவிப்பதாகவும், சில இடங்களில் பொதுச் சொத்தாக இருப்பதாகவும் தெரிய வருகிறது. பல கிராமங்களில் ஒரு குறிப்பிட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்களும்,

[a] Printed as Appendix I on page 408 infra.